

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் பெரியசேமூர் பகுதி கழக நிர்வாகிகள், BLA2, BLC நிர்வாகிகளுக்கு ஈரோடு தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். நிகழ்வில் கழக கொள்கை பரப்பு இணை செயலாளர் வி.சி.சந்திரகுமார், கழக மாணவரணி செயலாளர் வீரமணி ஜெயக்குமார், மாவட்ட கழக துணை செயலாளர்கள் ஆ.செந்தில்குமார், க.சின்னையன், மாவட்ட கழக பொருளாளர் ப.க.பழனிச்சாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.குமாரசாமி, பெரிய சேமூர் பகுதி கழக செயலாளர் வே.செல்வராஜ் உள்ளிட்ட வட்டக் கழக நிர்வாகிகள் கழக மூத்த உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.




திருப்பூர் கிழக்கு மாவட்டம், தாராபுரம் சட்டமன்ற தொகுதி, தாராபுரம் நகர கழக அலுவலகத்தில் நகர கழக நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடிக்குழு நிர்வாகிகள் ஆலோசனைக்கூட்டம் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் கழக மகளிர் அணி துணைச் செயலாளர், முன்னாள் அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ், நகர கழக செயலாளர் எஸ்.முருகானந்தம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன் கலந்து கொண்டு ஆலோசனைகளை வழங்கினார். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தன்சேகர், நகர்மன்ற தலைவர் கு.பாப்புகண்ணன் உள்பட மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள், வாக்குச்சாவடி குழு நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### சிறு குறு விவசாயிகளின் உற்பத்தித் திறனைப் பெருக்கிட வேண்டும்!

# விவசாயிகளின் வருமானத்தை அதிகரிக்க ஒன்றிய அரசு முன் வருமா?

## மாநிலங்களவையில் எஸ்.ஆர். சிவலிங்கம் கேள்வி!

புதுடெல்லி, ஜுலை 28-

திராவிட முன்னேற்றக் கழக, மேலவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்கள் 24.-07.-26 அன்று மாநிலங்களவையில் சிறு குறு விவசாயிகளின், விவசாய உற்பத்தி திறனை பெருக்கிடவும், விவசாயிகளின் ஆண்டு வருமானம் வளர்ச்சியடையவும், ஏதேனும் முயற்சிகளை ஒன்றிய அரசு மேற்கொண்டு உள்ளதா? என்றும், அவர்களுக்கு கடன் உதவி அதிக அளவில் கிடைக்கவும், விவசாயப் பொருட்களின் சந்தை வாய்ப்பை அதிகரிக்கவும், ஏதேனும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதா? என்றும் ஒன்றிய அரசின் விவசாயத் துறை இணையமைச்சர் ராம் நாத் தாகூர் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.



ஒன்றிய அரசின் விவசாயத் துறை இணையமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு:-

விவசாயம் மாநில அரசின் பட்டியலில் இருப்பதால், கொள்கை முடிவுகள் மூலமே ஒன்றிய அரசு மாநிலங்களுக்கு துணை செய்ய இயலும் என்றும், பல்வேறு ஒன்றிய அரசின் திட்டங்கள், அதிக பட்ச விலை நிர்ணயம், கடன் உதவி திட்டங்கள், சந்தை வாய்ப்புகளை அதிகப்படுத்துதல், போன்ற வற்றின் மூலம் ஒன்றிய அரசின் விவசாயத் துறை மாநிலங்களுக்கு உதவி வருகிறது என்றும், கடந்த 2025--26 ஆண்டில் உணவு பொருட்கள் உற்பத்தியின் அளவு 376 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது என்றும், தோட்டக்கலை பொருட்களின் உற்பத்தி 378 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளது என்றும் இணையமைச்சர் மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மேலும் கிஷான் கடன் அட்டைகள் திட்டம் மூலமாக 28 இலட்சம் கோடிகள் அளவிற்கு கடன் உதவி அளிக்கப்பட்டுள்ளது என்றும், பயிர் பாதுகாப்பீடு திட்டம் இராம் என்றழைக்கப்படும்தேசியவிவசாயத்திற்கான திட்டம், ராஷ்டிரிய கிரிஷி விகால்ப திட்டம், எண்ணெய் வித்துக்களுக்கான திட்டம், மண் வளத்தை பாதுகாக்கும் திட்டம் ஆகிய திட்டங்களை கிரிஷி விக்யான் கேந்திராக்களின் மூலம் மாநிலங்களில் ஒன்றிய அரசு செயல்படுத்தி வருகிறது என்றும், வானிலை மாற்றத்தால் பாதிக்கப்படும் 651 மாவட்டங்களுக்கான செயல் திட்டம் இந்திய விவசாய ஆராய்ச்சி குழுமத்தால் செயல் படுத்தப்படுகிறது என்றும் இதற்கான நிதியுதவி இதுவரை 151 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் 2900 அதிகமான புதிய பயிர் வகைகளை ஒன்றிய அரசு அளித்துள்ளது என்று ஒன்றிய அரசின் விவசாயத் துறை இணையமைச்சர் ராம்நாத் தாகூர் அவர்கள் மாநிலங்களவையில் தி.மு.க. மேலவை உறுப்பினர் எஸ். ஆர். சிவலிங்கம் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

### பிரதம மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY) திட்டத்தின் கீழ்

# தமிழ்நாட்டில் நடத்தப்படும் திறன் பயிற்றுவிக்கும் கல்வி பயிற்சிக்கூடங்கள் எத்தனை?

## மக்களவையில் ச.முரசொலி கேள்வி!

*தஞ்சாவூர், ஜுலை 29-*

ஒன்றிய அரசு, திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டு அமைச்சகத்தின் மூலம், செயல்படுத்தும் பிரதம மந்திரி கௌஷல் விகாஸ் யோஜனா (PMKVY) திட்டத்தின் கீழ் தமிழ் நாட்டில் நடத்தப்படும் திறன் பயிற்றுவிக்கும் கல்வி பயிற்சிக்கூடங்கள் எத்தனை என்று தஞ்சாவூர் பாராளுமன்ற உறுப்பினர் ச. முரசொலி கேள்வி எதுப்பியுள்ளார்.

மக்களவையில் அவர் எழுப்பிய கேள்வி யொன்றில், PMKVY மூலம் தஞ்சை மாவட்டத்தில் எத்தனை பேருக்கு பயிற்சி அளித்து, வேலையும் கொடுக்கப்பட்டுள்ளது என்ற கேள்வியையும் எழுப்பியுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் மேம்பா ட்டுத் துறை இணை அமைச்சர் ஜெயந்த் சௌத்ரி, (independent charge) தமிழ் நாட்டில் 10 பயிற்சி கூடங்கள் செயல்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

தஞ்சையை பொறுத்த வரை PMKVY மூலம் 4397 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.



2023-24ல் 779 பேர் 2024 25ல் 2658 பேர் 2025-26ல் 1500 பேர். 2026-27 க்காண விண்ணப்பம் ஏதும் வரவில்லையென்றும், பயிற்சி தேவை அடிப்படையிலேயே கொடுக்கப்படுகிறது என்றும் அறிவித்துள்ளார்.

தஞ்சாவூர் ITI மேம்படுத்தப்படுகிறதா என்றும் திறன் மையம் (skill hub) எதுவும் ஏற்படுத்தப்படுகிறதா என்றும் வினாவியுள்ளார்.

அதற்கு அமைச்சர் தஞ்சாவூர் ITI, spoke ITI என்று கூறியுள்ளார்.

பத்து பயிற்சி நிலையங்களில், 2 சென்னையிலும், தலா ஒன்று கோவை, திருச்சி மற்றும் திருநெல்வேலியிலும், 2 ராணிப்பேட்டையிலும் 3 வேலூரிலும் செயல்படுவதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

### தருமபுரி மாவட்டத்தில்

# தொற்றுநோய்களை ஒழிக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

## மக்களவையில் ஆ.மணி கேள்வி!

*புதுடெல்லி, ஜுலை 29-*

நடைபெற்று வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் மக்களவையில் தருமபுரி ஆ.மணி சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்தின் இணை அமைச்சர் திருமதி அனுப்ரியா படேலிடம்



தமிழ்நாட்டின் தருமபுரி மாவட்டத்தில் காசநோய் (Tuberculosis), டெங்கு, மலேரியா மற்றும் அப்பகுதிக்கே உரிய பிற தொற்றுநோய்கள் உள்ளிட்ட நாள்பட்ட உள்ளூர் நோய்கள் மற்றும் கொசு உள்ளிட்ட நோய் பரப்பும் உயிரினங்களால் பரவும் நோய்களைத் தடுப்பது, கட்டுப்படுத்துவது மற்றும் முற்றிலுமாக ஒழிப்பதற்காக சிறப்பு இலக்கு அடிப்படையிலான நடவடிக்கைகள் தேவைப்படும் மாவட்டமாக ஒன்றிய அரசு தருமபுரியை அடையாளம் கண்டுள்ளதா? அவ்வாறு கண்டிருந்தால் அதன் விவரங்கள் யாவை? கேள்வி எழுப்பினார். தொடர்ந்து அவர்

நோய் கண்காணிப்பு முறையை வலுப்படுத்துதல், ஆரம்ப நிலையிலேயே நோய்களைக் கண்டறிதல், ஆய்வக உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், பொதுமக்கள் விழிப்புணர்வு பிரச்சாரங்களை தீவிரப்படுத்துதல் மற்றும் உரிய நேரத்தில் சிகிச்சை வழங்குதல் ஆகியவற்றை உறுதி செய்யும் வகையில் தருமபுரி மாவட்டத்திற்கென தனிப்பட்ட மாவட்ட சுகாதார செயல் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா? அவ்வாறு தயாரிக்கப்பட்டிருந்தால் அதன் விவரங்கள் யாவை? என்றும்

தருமபுரி மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் நோய் கட்டுப்பாட்டு திட்டங்களின் செயல்திறனை ஒன்றிய அரசு ஆய்வு செய்துள்ளதா? அவ்வாறு ஆய்வு செய்திருந்தால், சுகாதார உள்கட்டமைப்பு, மருத்துவப் பணியாளர் பற்றாக்குறை மற்றும் பொதுச் சுகாதார சேவைகள் பொதுமக்களைச் சென்றடைவதில் உள்ள குறைபாடுகள் கண்டறியப்பட்டுள்ளனவா? அதன் விவரங்கள் யாவை?

தருமபுரி மாவட்டத்தில் நாள்பட்ட உள்ளூர் நோய்களின் பாதிப்பைக் குறைத்து, பொதுச் சுகாதார நிலையை மேம்படுத்துவதற்காக ஒன்றிய அரசு இது வரை எடுத்துள்ள மற்றும் இனி மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள நடவடிக்கைகள் யாவை? மேலும், அவற்றை செயல்படுத்த நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடு என்ன? என்றும் தருமபுரி எம்.பி. வழக்கறிஞர். ஆ.மணி கேள்வி எழுப்பி உள்ளார்.



கோவை மாநகராட்சி, தெற்கு மண்டலம் அலுவலகத்தில் வார்டு குழு கூட்டம் மாநகராட்சி துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. இதில் தெற்கு மண்டல குழுத்தலைவர் தனலட்சுமி, உதவி ஆணையாளர் நர்மதா, உதவி செயற்பொறியாளர் யோகசித்ரா உள்பட மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டின் விளையாட்டு மேம்பாடு மற்றும்

# முக்கிய கேள்விகளுக்கு நேரடி பதில் தராமல் தவிர்ப்பதா?

## மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஜுலை 29-*

தமிழ்நாட்டின் விளையாட்டு மேம்பாடு தொடர்பான முக்கிய கேள்விகளுக்கு நேரடியான பதிலைத் தவிர்த்த ஒன்றிய அரசு என மக்களவையில் ஈரோடு கே.இ.பிரகாஷ் குற்றம் சாட்டினார்.

ஈரோடு மக்களவை உறுப்பினர் கே. இ. பிரகாஷ் அவர்கள், கடந்த ஐந்து மாதங்களில் தமிழ் நாட்டில் கேலோ இந்தியா (Khelo India) திட்டம் மற்றும் பிற ஒன்றிய ஆதரவு விளையாட்டுத் திட்டங்களின் செயல்பாடு குறித்து ஒன்றிய அரசு ஆய்வு மேற்கொண்டுள்ளதா என்றும், அதன் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள், ஒதுக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட நிதி பெறப்பட்ட முன்மொழிவுகள், குறிப்பாக ஈரோடு மாவட்டம் தொடர்பான விவரங்கள் என்ன என்பதையும் ஒன்றிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சரிடம் விளக்கம் கோரினார் மேலும், தமிழ் நாட்டின் கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் விளையாட்டு உள்கட்டமைப்பு மற்றும் அடிமட்ட விளையாட்டு மேம்பாடு குறித்து மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு, புதிய விளையாட்டு உள்கட்டமைப்பு மற்றும் இளைஞர் விளையாட்டு மேம்பாட்டு முன்மொழிவுகள், மாநில அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து விளையாட்டு வசதிகளை விரிவுபடுத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள், 'மேரா யுவா பாரத்' (MY Bharat) தளத்தில் மாவட்ட வாரியாக பதிவு செய்துள்ள இளைஞர்களின் எண்ணிக்கை, கடந்த ஐந்து மாதங்களில் தமிழ் நாட்டிலிருந்து பங்கேற்ற இளைஞர்களின் விவரங்கள் மற்றும் மாநிலத்தில் MY Bharat திட்டத்தில் இளைஞர்களின் பங்கேற்பை அதிகரிக்க ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.



இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சகம் அளித்த பதில் பின்வருமாறு

(அ) முதல் (ஈ) வரை: 'விளையாட்டு' என்பது மாநிலப் பட்டியலில் அடங்கும் என்பதால், விளையாட்டு உள்கட்டமைப்பு உருவாக்குதல், அதன் போதுமான தன்மையை மதிப்பீடு செய்தல், கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளில் அடிமட்ட விளையாட்டை மேம்படுத்துதல் உள்ளிட்ட பொறுப்புகள்

முதன்மையாக சம்பந்தப்பட்ட மாநில அரசுகள் மற்றும் ஒன்றியப் பிரதேச நிர்வாகங்களுக்கே உரியவை என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. இத்துறையில் உள்ள முக்கிய இடைவெளிகளை நிரப்பும் வகையில் மட்டுமே ஒன்றிய அரசு துணைபுரிகிறது என்றும், மேற்கண்ட அம்சங்கள் தொடர்பாக மாநில அரசிடமிருந்து எந்தவித மதிப்பீட்டு அறிக்கையும் அமைச்சகத்திற்கு கிடைக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

நாடு முழுவதும், தமிழ் நாடு உட்பட, அமைச்சகம் செயல்படுத்தி வரும் திட்டங்கள்

*i.* கேலோ இந்தியா தேசிய விளையாட்டு மேம்பாட்டுத் திட்டம்;

*ii.* தேசிய விளையாட்டு சம்மேளனங்களுக்கு (NSFs) நிதியுதவி;

*iii.* சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர்கள் மற்றும் அவர்களின் பயிற்சியாளர்களுக்கு ரொக்க ஊக்கத் தொகை;

*iv.* தேசிய விளையாட்டு விருதுகள்:

*v.* சிறந்த விளையாட்டு வீரர்களுக்கான ஓய்வூதியம்;

*vi.* பண்டிட் தீன்தயாள் உபாத்யாயா தேசிய விளையாட்டு வீரர்கள் நலத் திட்டம்;

*vii.* தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதியம் (NSDF);

*viii.* இந்திய விளையாட்டு ஆணையம் (SAI) மூலம் விளையாட்டுப் பயிற்சி மையங்கள்; மற்றும்

*ix.* தேசிய விளையாட்டு அறிவியல் மற்றும் ஆராய்ச்சி மையம் (NCSSR).

மேற்கண்ட திட்டங்கள் தொடர்பான விவரங்கள் அமைச்சகம் மற்றும் இந்திய விளையாட்டு ஆணையத்தின் இணையதளங்களில் பொதுமக்கள் பார்வைக்கு கிடைக்கின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேலோ இந்தியா திட்டம் மற்றும் தேசிய விளையாட்டு மேம்பாட்டு நிதியம் (NSDF) ஆகியவை தேவையடிப்படையிலான திட்டங்கள் என்றும், மாநில அரசுகள், ஒன்றியப் பிரதேசங்கள் மற்றும் பிற தகுதியுள்ள அமைப்புகளிடமிருந்து பெறப்படும் முன்மொழிவுகள், அவற்றின் முழுமை, தொழில்நுட்ப சாத்தியக்கூறு மற்றும் நிதி கிடைப்புத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு நிதியுதவி வழங்கப்படுவதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஒப்புதல் அளிக்கப்பட்ட விளையாட்டு உள்கட்டமைப்பு திட்டங்கள், ஒதுக்கப்பட்ட நிதி, விடுவிக்கப்பட்ட தொகை மற்றும் அவற்றின் முன்னேற்றம் தொடர்பான விவரங்கள் அமைச்சகத்தின் பொது இணையத் தளங்களில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது.

மேலும், மாநில அரசுகள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களுடன் இணைந்து விளையாட்டு வசதிகள் மற்றும் சமூக அடிப்படையிலான விளையாட்டுத் திட்டங்களை விரிவுபடுத்த அமைச்சகத்தின் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளது.

(உ): தமிழ்நாட்டில் 'மேரா யுவா பாரத்' (MY Bharat) தளத்தில் மாவட்ட வாரியாக பதிவு செய்துள்ள இளைஞர்களின் எண்ணிக்கை இணைப்பு1ல் வழங்கப்பட்டுள்ளதாகவும், கடந்த ஐந்து மாதங்களில் 1,86,246 இளைஞர்கள் MY Bharat தளத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றுள்ளதாகவும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

(ஊ): MY Bharat தளம், அனுபவக் கற்றல் திட்டங்கள் (ELPs), வினாடி வினா நிகழ்ச்சிகள் மற்றும் பிற இளைஞர் மையப்படுத்தப்பட்ட வாய்ப்புகளை வழங்கும் டிஜிட்டல் தளமாக செயல்படுகிறது என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. கடந்த ஐந்து மாதங்களில் தமிழ்நாட்டிற்காக 473 தன்னார்வப் பணியாற்றும் வாய்ப்புகளும், 933 அனுபவக் கற்றல் திட்டங்களும் (ELPS) மற்றும் பல்வேறு இளைஞர் ஈடுபாட்டு நிகழ்ச்சிகளும் MY Bharat தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இவ்வாறு விளையாட்டுத் துறை அமைச்சகம் பதிலளித்துள்ளது.

### அண்ணா பல்கலைக் கழகம்

# தேர்வு முடிவுகளை வெளியிடுவதில் காலம் தாழ்த்துவதா?

## கழக மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி கண்டன அறிக்கை!

**சென்னை, ஜுலை 29-**

**தேர்வு முடிவுகள் வெளியிடுவதில் தொடர்ந்து கால தாமதத்தைக் ஏற்படுத்தி வரும் அண்ணா பல்கலைக்கழக நிர்வாகத்தை கண்டித்து கழக மாணவர் அணிச் செயலாளர் ஈரோடு ஜெ.வீரமணி அறிக்கை விடுத்துள்ளார்.**

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

கழகத் தலைவர் அவர்களின் தொலைநோக்கு வழிகாட்டலில் இயங்கிய கடந்த திராவிட மாடல் அரசின் கீழ், "மாணவர் நலன் சார்ந்த பல வரலாற்று சிறப்பு மிக்க திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன". மாணவச் செல்வங்களின் உயர்கல்விக் கனவை நனவாக்கவும், அவர்களின் எதிர்காலத்தைப் பாதுகாக்கவும் கழகமும் மாணவர் அணியும் தொடர்ந்து பாடுபட்டு வருகின்றன.

இச்சூழலில் தமிழ்நாட்டின் முதன்மைத் தொழில் நுட்பக் கல்வி நிறுவனமான அண்ணா பல்கலைக்கழகத்திலும், அதன் இணைவுபெற்ற நூற்றுக்கணக் கான பொறியியல் கல்லூரிகளிலும் பருவத் தேர்வுகள் முடிவடைந்து பல நாட்கள் ஆகியும், தேர்வு முடிவுகள் உரிய காலத்தில் வெளியிடப்படாமல் தொடர்ந்து தாமதப்படுத்தப்பட்டு வருவது மிகவும் வேதனையளிப்பதோடு, கடுமையான கண்டனத்திற்குரியது. அண்ணா பல்கலைக்கழக நிர்வாகத்தின் திட்டமிடலற்ற அலட்சியப் போக்கு மாணவர்களின் எதிர்காலத்திற்குப் பெரும் முட்டுக் கட்டையாக அமைந்திருப்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றாகும்.

தேர்வு முடிவுகள் தாமதமாவதால் பொறியியல் மாணவர்கள் சந்திக்கும் கடுமையான பாதிப்புகள்: வளாக நேர்முகத் தேர்வு (Campus Placements) & பணி வாய்ப்புகள் இழப்பு: முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் (IT Companies) மற்றும் மைய (Core) நிறுவனங்களில் வளாக நேர்முகத் தேர்வு மூலம் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு, குறித்த காலத்தில் மதிப்பெண் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க முடியாததால் பணி நியமன ஆணைகள் (Offer Letters) இரத்து செய்யப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

**உயர்கல்வி மற்றும் வெளிநாட்டுப் படிப்பு முடக்கம்:**

முதுநிலைப் படிப்புகளுக்கும், வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி பயிலவும் விண்ணப்பித்துள்ள மாணவர்கள், உரிய நேரத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தின் சான்றிதழ்கள் கிடைக்காமல் நல்வாய்ப்புகளைப் பறி கொடுக்கின்றனர்.

**போட்டித் தேர்வுகளில் சிக்கல்:**

GATE, UPSC, TNPSC, SSC, வங்கி, இரயில்வே உள்ளிட்ட அரசுப் போட்டித் தேர்வுகளுக்கு விண்ணப்பிப்பதிலும், சான்றிதழ் சரிபார்ப்பிலும் மாணவர்கள் பெரும் தடைகளைச் சந்திக்கின்றனர்.

**அதிகரிக்கும் மன உளைச்சல்:**

தேர்வு முடிவுகள் பற்றிய நிச்சயமற்ற சூழலால் மாணவர்களும், அவர்களின் பெற்றோர்களும் கடும் மனஅழுத்தத்திற்கு ஆளாவதோடு, அடுத்த பருவப் படிப்பில் கவனம் செலுத்த முடியாமல் தவிக்கின்றனர்.

**மாணவர்களுக்கும் ஏற்படும் பொருளாதார சிக்கல்கள்:**

தேர்வு முடிவுகள் அறிவிக்கப்படுவதில் ஏற்படும் கால தாமதம், மாணவர்களின் வேலைவாய்ப்பு மற்றும் தொடர் கல்வியைப் பாதிப்பதுடன், அவர்களுக்கும் அவர்களின் பெற்றோர்களுக்கும் தேவையற்ற கூடுதல் பொருளாதாரச் சுமையையும் ஏற்படுத்துகிறது.

மாணவச் செல்வங்களின் உரிமைகளையும், அவர்களின் வேலைவாய்ப்புகளையும் காப்பதே கழகத் தலைவர் அவர்களின் கொள்கையாகும். அதற்கு மாறாக பல்கலைக்கழக நிர்வாகம் அலட்சியமாகச் செயல்படுவதை திமுக மாணவர் அணி ஒருபோதும் சகித்துக் கொள்ளாது.

**திமுக மாணவர் அணியின் திட்டவட்டமான கோரிக்கைகள்:**

1. நிலுவையில் உள்ள அனைத்துப் பருவத் தேர்வு முடிவுகளையும் (Regular & Arrear Results) காலதாமதமின்றி உடனடியாக வெளியிட வேண்டும்.

2. விடைத்தாள் நகல் (Photocopy), மறுமதிப்பீடு (Revaluation) மற்றும் பட்டச் சான்றிதழ்கள் வழங்கும் பணிகளைக் குறிப்பிட்ட காலக் கெடுவுக்குள் (Timebound) முடித்திட வேண்டும்.

3. வருங்காலங்களில் தேர்வு முடிவுகள் வெளியாகும் தேதியை உள்ளடக்கிய துல்லியமான கல்வியாண்டு கால அட்டவணையை (Academic Calendar) வெளியிட்டு, அதனை அண்ணா பல்கலைக்கழக நிர்வாகம் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

பொறியியல் மாணவர் சமுதாயத்தின் உரிமைகளையும், அவர்களின் எதிர்காலத்தையும் சீர்குலைக்கும் எந்தவொரு நிர்வாகச் சீர்கேட்டையும் திமுக மாணவர் அணி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்காது. உடனடியாகத் தேர்வு முடிவுகளை வெளியிட்டு மாணவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டும் என அண்ணா பல்கலைக் கழக நிர்வாகத்தை வலியுறுத்துகிறோம்.

இவ்வாறு ஈரோடு ஜெ.வீரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.